பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூபா 3-50

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஷுல மாசி மீ 23 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 09 (07-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 27

ஈரோஸின் தலைமையில் பெரும்மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஈரோஸ் இயக்கத்தின் தலைமைப் பீடத்தில் பெரும் மாற்றம் வந்திருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவந்தது.

ஈரோஸ் இயக்கத்தின் செயற்பாடுகளை வழி நடத்திவரும் ஈரோஸ் பொதுக் குழுவின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும்-

திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் உட்பட சிலர் அடங்கிய குழு ஒன்றிடம் ஈரோஸ் இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது:

ஆனால் இந்தத் தகவல் குறித்து கருத்துக் கேட்டபோது அதற்குப் பதிலளிக்கவோ, அல்லது தகவல்வெளியிடவோ திரு. பாலகுமாரன் மறுத்துவிட்டார்.

ஓர் இக்கட்டான காலகட்டத்தில்இயக்கத்தை நடத்திச் செல்லவேண்டியிருப்பதால், சிறிய எண்ணிக்கை அங்கத்தவர்கள் கொண்ட ஒரு குழுவிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டதாக ஈரோஸ்

(5ஆம் பக்கம் பார்க்க)

சாராய உற்பத்தி 1கோடி லீற்றரால் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 7

அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம் தனது சாராய வகை உற்பத்தியை ஒருகோடி லீற்றரால் அதிகரிக்கவுள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் சாராய உற்பத்தி இவ்வாறு அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது இக்கூட்டுத்தாபனம் வருடாந்தம் 2 கோடியே 65 லட்சம் லீற்றர் சாராய வகைகளை உற்பத்தி செய்து வருகிறது. இதில் 2 கோடியே 10 லட்சம் லீற்றர்கள் தென்னஞ் சாராயமும், "கல்" சாராயமும் ஆகும்.

கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் இதுபற்றிமேலும் தகவல் தருகையில் கூறியதாவது:-

கடந்த 3 வருட காலமாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி மிகவும் குறைந்து காணப்பட்டது. சாராய உற்பத்திக்குத் தேவையானதென்

(5 ஆம் பக்கம் பார்க்க)

புனாவையில் வாகனங்கள் கொள்ளைக்கு இலக்காகின!

யாழ்ப்பாணம், மார்ச் 7

நேற்று முன் தினமிரவு யாழ்-கொழும்பு போக்குவரத்தில் ஈடுபட்ட 3 மினி பஸ்களும், 2 லொறிகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

இரவு ஒரு மணியளவில் புனாவையில் வைத்து வீதிக்குக் குறுக்கே கட்டைகளைப் போட்டு வாகனங்களை மறித்த ஆயுதக்கோஷ்டி ஒன்று கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

கொள்ளைச் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததை அடுத்து கொழும்பிலிருந்து வந்த வாகனங்கள் அனைத்தையும் மதவாச்சியில் ஸ்ரீலங்கா படையினர் தடுத்துவைத்தனர். வாகனங்கள் அனைத்தும் பொழுது விடிந்தபின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன.

(உ-9)

நிலுவைப் பணம் செலுத்தாததால் 26 மாகாணசபை உறுப்பினரின் தொலைபேசிகள் துண்டிப்பு!

மட்டக்களப்பு, மார்ச். 7

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மாகாண சபை உறுப்பினர்கள் 26பேரின் தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

தொலைத் தொடர்பு இணைக்களத்துக்கு 6 லட்சத்து 34 ஆயிரம் ரூபா நிலுவையைச் செலுத்தத் தவறியதை அடுத்தே இவை துண்டிக்கப்பட்டதாக பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு. ரி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாணசபையின் செயலாளர் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே இந்த 26 தொலைபேசி இணைப்புக்களும் வழங்கப்பட்டன என்றும்—

எனினும் இதற்கான கட்டணங்களை உரிய முறையில் மாகாணசபை நிர்வாகம் செலுத்தத் தவறியதை அடுத்தே இவை துண்டிக்கப்பட்டன என்றும் திரு. இராஜேஸ்வரன் கூறினார்.

13 முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களதும், 11 ஈ.பி.ஆர். எல். எவ். உறுப்பினர்களதும், ஒரு ஐ. தே. க உறுப்பினரதுமாக மொத்தம் 26 தொலைபேசி இணைப்புகளே

(8ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

பெருங் 'குடி' மக்கள் இனி தாராளமாய் பாவிக்கலாம் எண்டு சொல்லுங்கோ...!

17 இரட்டைத்தட்டு பஸ்கள் வடக்கே வருகின்றன!

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 17 இரட்டைத் தட்டு பஸ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த பஸ்கள் அடுத்தமாதம் 6 ஆம் திகதி அளவில் வடபிராந்திய போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட உள்ளன.

இந்த பஸ்கள் இங்கு வந்ததும் கோண்டாவில், காரைநகர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

(இ-9)

தமிழ்ஈழப் பிரகடனம்; கேலிக் கூத்தானது!

வன்மையாகக் கண்டித்து புலிகள் அறிக்கை

கொழும்பு, மார்ச் 7

ஈ. பி. ஆர். எல். எவ். நிர்வாகத்தினரால் செய்யப்பட்டுள்ள ஒரு தலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் வேடிக்கையானதும், நகைப்புக்கிடமானதும், பொறுப்பற்றதுமான செயலாகும். அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

—இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் குழு அதன் தலைமை அலுவலகத்தில் இருந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

அறிக்கை வருமாறு:

ஈ. பி. ஆர். எல். எப். நிர்வாகத்தினரால் செய்யப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் வேடிக்கையானதும் நகைப்புக்கிடமானதும் பொறுப்பற்றதுமான செயல் என்று கண்டிக்கிறோம்.

இச் சுதந்திரப் பிரகடனம் சட்டப்படியான குறிக்கோளை அடைவதற்கு மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள போராட்டத்தை கேலிக்கூத்தாக்கியுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எப், ஈ. என். டி. எல். எப். இயக்கங்கள் வெளிநாட்டுச் சக்திகளின் கைப்பொம்மைகளாக இருக்கின்றன. மக்களின் நலனில் உண்மையான நாட்டமுள்ளவர்களாக இவ் இயக்கங்கள் இருக்கவில்லை. இவ்விரு இயக்கத்தினரும் எமது மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களும் அல்லர்;

அத்துடன் இத்தகைய பிரகடனம் ஒன்றைச் செய்வதற்கு மக்களிடமிருந்து ஆணையைப் பெற்றுக் கொண்டவர்களுமல்

[5 ஆம் பக்கம் பார்க்க]

பயிலுநர் ஆசிரியர் தெரிவு: மேன்முறையீடு விசாரணை திகதிகளில் மாற்றம்

பயிலுநர் ஆசிரியர் தெரிவு தொடர்பாகச் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பற்றிய விசாரணை நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுவிஸ் உதவி

கொழும்பு, மார்ச் 7

வடக்கு,கிழக்கு மாகாண விவசாய அபிவிருத்தி வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க சுவிட்ஸர்லாந்து அரசு 30லட்சம் ஸ்ரேலிங்பவுண் நிதி உதவியை வழங்கியுள்ளது.

(ஒ — எ)

வேலணை, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்தன.

பருத்தித்துறை கிழக்கு, கரவெட்டி பிரிவுகளுக்கு இன்றும், சண்டிலிப்பாய் பிரிவுக்கு நாளையும், சங்கானை, தெல்லிப்பழை பிரிவுகளுக்கு ஒன்பதாம் திகதியும், நல்லூர் பிரிவுக்கு பத்தாம் திகதியும், நல்லூர், யாழ்ப்பாணம் பிரிவுக்கு பதினொராம் திகதியும் -

பருத்தித்துறை பிரிவுக்கு பன்னிரண்டாம் திகதியும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

எல்லோரும் தேர்தலில் போட்டியிடலாம் ஆனால் மக்கள் ஆதரவு புலிகளுக்கே!

புதுடில்லி, மார்ச் 7

எல்லா அமைப்புக்களும் தேர்தலில் போட்டியிட முடியும். ஆனால் அவர்களால் வெல்ல முடியாது; மக்கள் ஆதரவு புலிகளுக்கே விடுதைபுலிகள் தான் தேர்தலில் வெல்லமுடியும்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் ''த வீக்'' ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் இப்படித்தெரிவித்திருக்கிறார் அந்தப் பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: அமைதிப்படை விலகுவதை அடுத்து அங்குள்ள தரை நிலைமை எப்படி உள்ளது?

பதில்: விடுதலைப் புலிகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டு இரத்த ஆறு ஓடும் என்று மக்கள் எண்ணினர். ஆனால் அது நடைபெறவில்லை. ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரின் உளசார் (Morale) நிலை அடி மட்டத்தில் மனம் தளர்வு நிலையில் — இருந்தது. இது விஷயத்தில் அவர்களுக்கு உதவும் அக்கறை அமைதிப் படையினரிடமும் இருக்கவில்லை.

அமைதிப்படை விலகிய அடுத்த நிமிடம் விடுதலைப் புலிகள் பொறுப்பேற்கின்றனர். மறு கேள்விக்கே இடமில்லாத வகையில் அங்கு விடுதலைப் புலிகள்தான் தலைவர்களாக இருக்கின்றனர், வடக்கு-கிழக்கு முழுவ

(5ஆம் பக்கம் பார்க்க)

'த வீக்' இதழுக்கு அளித்த பேட்டியில் பாலகுமாரன்

கிளிநொச்சி, மன்னார் பயிலுநர் ஆசிரியர்களுக்கு 15 ஆம் திகதி நியமனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட உள்ளன.

பயிலுனர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டோரின் சேவை அங்குரார்ப்பண வைபவமும் அன்று இடம்பெறும்.

இதற்கான அறிவித்தல்களை அந்தந்தப் பகுதி பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவான பயிலுனர் ஆசிரியர்களுக்கு 15 ஆம் திகதி காலை 9 மணிக்கும் -

நானாட்டான்உதவிஅரசாங்

(4ஆம் பக்கம் பார்க்க)

சுப நேரம்

7 - 3 - 1990

புதன்கிழமை மாசி 23

சுப நேரம்:

4-55 முதல் 6-25 வரை

ராகுகாலம்:

12-25 முதல் 1-55 வரை

ஏகாதசி விரதம்

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

தமிழகப் பிரமுகர் நெடுமாறன் கிழக்கில் சூறாவளி பயணம்

மட்டக்களப்பு, மார்ச் 7

தமிழகப் பிரமுகர் திரு. பி. நெடுமாறன் அம்பாறை, மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, மண்டூர், வாகரை, பொத்துவில் ஆகிய பகுதிகளுக்குச் சென்று நிலைமையை அவதானித்துள்ளார்.

அப்பகுதிகளில் இந்தியப் படையின் இராணுவ நடவடிக்யையால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

திரு. நெடுமாறனுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலனும் சென்றிருந்தார்.

(ஒ-21)

9,921பேர் காவலில்!

கொழும்பு, மார்ச் 7

இம்மாதம் 4ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 9ஆயிரத்து 921 என்று அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இவர்களில் சரணடைந்த 3ஆயிரத்து986பேர் புனர்வாழ்வு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஒ — எ)

வட-கிழக்கு மாகாணசபையின் இரு 'முக்கிய' அதிகாரிகளும் அகதியாகச் செல்வார்களாம்

அமைதிப்படையுடன் இந்தியா செல்வதற்காக தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் இரண்டு அதிமுக்கிய அதிகாரிகளும் இருக்கின்றனராம்.

இந்த இரண்டு அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினருடன்சென்னைவாடியில் உள்ள வீடு ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்தது.

அமைதிப்படையின் கடைசித் துருப்புக்கள் செல்லும் கப்பலில் இவர்களும் அழைத்துச் செல்லப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

தொண்டர் ஆசிரியருக்கு புது நியமனம்: 1 வருடம் சேவையாற்றியோர் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், மார்ச்7

'31-12-89 ஆம் திகதிக்கு முன் தொடர்ச்சியாக ஒரு வருடம் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களே புதிய நியமனத்துக்கு விண்ணப்பிக்க முடியும்'.

இப்படியான அறிவித்தல் ஒன்றை கல்விச் சேவைகள் ஆணைக்குழு விடுத்துள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கும் விடயம் குறித்து வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளது. இதற்கான முடிவுதிகதி இம்மாதம் 16ஆம் திகதியாகும்.

இதில் உள்ள முக்கிய விடயங்கள் வருமாறு.

★ அரசாங்கப் பாடசாலைகளில் சம்பளம் இன்றி முழுநேர சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். அல்லாவிட்டால் வசதிக் கட்டணத்தில் அல்லது பாடசாலை அபிவிருத்தி நிதி

(8ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

டச்வீதியில் சகல வசதிகளும் உள்ள. வீடு 2½ பரப்புடன் அல்லது வெறுங்காணி 3 பரப்பு உடன்விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.விவேகானந்தன், ஆனந்த மஹால், 15, டச்வீதி, சாவகச்சேரி. (2816)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காயம், பீட்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

புத்தகம்

பங்குனி அம்புலி மாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (11927)

கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Unsex) தவிசிலப்பு, கறப்பு நிற சேவல். பேடு (பிலிமத்) கறப்பு வங்சேவல் (Dekalb) பிறவுண் பேடு, சேவல் [Cobb] புறொயிலர் குஞ்சுகள் (7 - 3 - 90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9 கந்தையா ஒழுங்கை, சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (11949)

கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை' சிலப்பு. கறப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2656)

தேவை

அச்சுக வேலைகள் பயில்வதற்குபடித்த பெண்பிள்ளைகள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (2821)

ஆஸ்பத்திரி வீதி 664ம் இலக்கத்தில் இருக்கும் புதிய சித்திரா பதிப்பகத்திற்கு அனுபவம் வாய்ந்த கொம்பஸிட்டர்கள், பைண்டர்கள் தேவை. ஆண். பெண் இருபாலாரும் தோற்றலாம். நேரில் வரவும். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2824)

மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள, பெற்றோர் 37, வயது பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கு தகுந்த மணமகன் தேடுகிறார்கள். வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும். குறிப்புடன் முழு விபரங்களையும் அனுப்பவும். இல. 633, C/o உதயன். (2817)

மணமகள் தேவை

யாழ் இந்து உயர் வேளாள குல, கனடாவில் தொழில் புரியும் நற்பழக்கமுள்ள 2 இல் செவ்வாய்க் குற்றமுடைய 34 வயதுடைய மகனுக்கு படித்த பண்புள்ள இதே இனத்தைச் சேர்ந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். சாதக குறிப்புடன் தொடர்புகொள்ளவும். சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. No. 632. C/o உதயன் (2815)

மணமக்கள் தேவையா?

இருபாலாரின் ஜாதகக்குறிப்புகளுடனும் விபரங்களுடனும்எம்மிடம் தொடர்பு கொள்ளவும். K. K. நாதன், C/O. கந்தையா, கிழுவானை வீதி, கோப்பாய் தெற்கு. கோப்பாய். (2813)

தவறிவிட்டது

நாராயணன்இலட்சுமணன் ஆகியநான்எனது அடையாள அட்டை இல. 252030806 V ஸ்டான்லிறோட் மக்கள் வங்கியில் 21. 2- 90 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி 191, கஸ்தூரியார் வீதி விலாசத்திலோ ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (11958)

ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடையில் புனர் வாழ்வு அமைச்சின் நிவாரண அட்டையும், வங்கிக் கடன் பத்திரங்களும் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ இராசநாயகம் பிள்ளையார் கோவிலடி, கட்டுவன் தெல்லிப்பழை விலாசத்துக்கோ அனுப்பவும். சன்மானம் கிடைக்கும். (2818)

Saairaam

புதிய, பழைய தளபாடங்கள் Olympia. Typewriter, English Hiredryer, புத்தகம் புதிய M. D. 90, Honda வை 7- 3- 90 புதன் 12 P.m, 5 P.m பார்வையிடலாம். Saairaam, 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (2822)

அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் காட்டுகள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

90ஆம் ஆண்டு பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட சுழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

சங்கீதம்

இசை முத்துக்கள் (26 அரிய கீர்த்தனங்களும், 7 அழகான பண்ணிசை தேவாரங்களும் சுர, தாளக் குறிப்புடன்) பதிப்பாசிரியர் க.ச. கனகசிங்கம் இசை ஆய்வாளர் விலை ரூபா 35/- விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C/3490)

Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

தேவை

புரியாணி தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களுடன் ரீ மேக்கர் வேலை தெரிந்தவர்களும், வெயிட்டர் வேலை செய்யக்கூடியவர்களும், கடையில் தங்கி காசாளர் வேலை செய்யக்கூடியவர்களும் தேவை. நேரில் வரவும். றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2811)

தமிழ்த்தின போட்டிகள்

மானிப்பாய் மார்ச்-7 மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலக பிரிவின் 1990 ஆம் ஆண்டுக்கான தமிழ் தினப் போட்டிகள் இம்மாதம் 24 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என மருதனார்மட கோட்ட கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கொத்தணி மட்டத்தில் தமிழ்த்தினத்துக்கான போட்டிகளை இம்மாதம் 20 ஆம் திகதிக்குள் நடத்தி 21 ஆம் திகதிக்குமுன் விண்ணப்பங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு இக்கோட்டத்துக்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களையும் அவர் கேட்டுள்ளார். (இ-90)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 18. 3. 90. ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மு. இராமலிங்கம் — தலைவர்
பொ. கிருஷ்ணசாமி — செயலாளர்

(12004)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நாகலிங்கம் - நல்லையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மலர்வு: 26 - 03 - 1922
உதிர்வு: 11 - 03 - 1987

திதி: 07. 03. 1990

ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள் அன்பும், பண்பும் எங்கள் மனதை விட்டு அகலமாட்டாது.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

மாரீசன்கூடல்,
இளவாலை. (12003)

உங்கள் தேவை! எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகளுக்கு

* * *

"ஷ்றா" (சேவைப் பகுதி)

இல. 19. 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகேசு பேரம்பலம்
(உத்தம விவசாயி)

தோற்றம்: 30 - 08 - 1938
மறைவு: 19 - 03 - 1989

திதி: 07. 03. 1990

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர்கள்,
அருணாசலம்பிள்ளை,
கனகரத்தினம்,
குடும்பத்தினர்.

185/1, முரசுமோட்டை,
பரந்தன். [2733]

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் ஐயாத்துரை ஜெயம்

அன்னை மடியில்: 25 - 07 - 1962
ஆண்டவன் மடியில்: 07 - 03 - 1987

ஆண்டு மூன்று சென்றாலும்
ஆறாது எம்துயர் என்றும்
உனது ஆத்மசாந்திக்கு எமது பிரார்த்தனை

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

ஓம் ரெக்ஸ்,
யாழ்ப்பாணம். [2736]

To Help you
Begin Build up & Enrich your English

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
க.பொ.த. உ/த. தொழில்நுட்ப, பல்கலைக்கழக, பட்டதாரி மாணவர்களுக்குரிய;

An Integrated English Course
(ADVANCED)

6 மாத கால தீவிரப் பயிற்சி

ஆரம்பம்: 25 - 03 - 1990

★ English Speech Practice (Spoken)
★ Grammar & Usage
★ Vocabulary Enrichment
★ Reading with Understanding Prose & Verse
★ Practice in Writing

இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
கட்டணம் ரூபா 450. 00 (முழுப் பயிற்சிக்கும்)
வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில்,
விபரங்களுக்கு:

ASTAN INSTITUTE

166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
[சி/3472]

O/L 1990 (March)
மாணவர்களுக்கு
இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [கணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடமும் மட்டுமே நடாத்தப்படும்.
   பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் கூட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit

விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

Red - No — 12141

[சி-3492]

31ஆம் நாள் நினைவஞ்சலி

"சிவநெறிச் செம்மல்"
திரு. ஆறுமுகம் மயில்வாகனம்
(முன்னைநாள் ஆசிரியர்)

பிறப்பு: 03 - 09 - 1921
இறப்பு: 05 - 02 - 1990

அன்பின் உருவமாய், பண்பின் இருப்பிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து எம்மை வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்து இமைப்பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளின் போது பங்கு கொண்டோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் பலவழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. [2731]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
செஞ்சத்து அவலம் இவர்.

பொருள்:

நன்மை அறிந்தவரை விடக் கயவரே நல்ல பேறு உடையவர்; ஏன் என்றால், கயவர் தம் நெஞ்சில் எதைப்பற்றியும் கவலை இல்லாதவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
07- 03- 1990 த. பெ. இலக்கம் : 23

நீதியான தீர்வுக்கு கடைசிச் சந்தர்ப்பம்

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜாவுக்கும்(மாத்தயா) இடையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் மீண்டும் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

இருவரும் பங்குபற்றிய இரண்டாவது சந்திப்பு இது ஆகும்.

ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படையினரை வெளியேற்றுவதிலும் யுத்த நிறுத்தம் செய்வதிலும் மட்டும் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் தற்போது பலமட்டங்களைத் தாண்டியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு மகேந்திரராஜா ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் அளவுக்கு பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது,

தற்போதைய முட்டுக்கட்டைநிலையை நீக்கி ஓர் இடைக்காலத் தீர்வை ஏற்படுத்தும் நோக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈ. பி. ஆர், எல். எவ் உம் தனித் தனியாக யோசனைகளைத் தெரிவித்திருந்தன.

ஆனால்—

தற்போது ஈ. பி. ஆர். எல். எவ்வை பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணசபை தன்னை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து ஈ. பி. ஆர். எல். எவ்விற்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணசபையும் அதன் நிர்வாகமும் ஸ்தம்பிதம் அடைந்துவரும் நிலை ஒருபுறமிருக்க—

ஈ. பி. ஆர். எல். எவ். சக்திகள் பாதுகாப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறி வரும் நிலை மற்றொருபுறமிருக்க...

தமிழ் தேசிய அரசுப் பேரவை பிரகடனம் இலங்கை அரசுக்கும் ஈ. பி. ஆர். எவ்விற்கும் இடையிலான பேச்சுவார்த்தை சூழ்நிலையை முற்றாக துண்டிக்க வழிசெய்துவிட்டது.

ஆகவே தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் மட்டுமே தொடர இருக்கின்றன.

ஈழத் தமிழர் மத்தியில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் தமதுபலம்மிக்க சக்தியை வெளிப்படுத்தி வரும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை உரிய முறையில் — நியாயமானபோக்கில் — நடத்திச் சென்று ஈழத்தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய நியாயமான தீர்வைக் காணவேண்டிய பெரும் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கிறது.

ஜனாதிபதியின் அணுகு முறைகளை நோக்கும்போது கடந்த கால கசப்பான அநுபவங்களைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அவர் அக்கறை காட்டி வருகிறார் போல் தெரிகிறது.

இதே போன்ற உணர்வு தென் இலங்கை அரசியல் தலைவர்கள் அத்தனை பேருக்கும் ஏற்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற விடயத்தில் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஏற்பட்டிருக்கும் உண்மையான மனமாற்றம், தென்பகுதியில் உள்ள அனைவருக்கும் ஏற்பட வேண்டும். என ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமார் கூறியிருப்பதை சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

நிலையான தீர்வுக்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்பதை தென் இலங்கைத் தலைவர்கள் உணர வேண்டும் இந்தச் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி தீர்வுக்கு வழி காணவேண்டும்.

இத்தச் சந்தர்ப்பத்தையும் அவர்கள் வெறும் வாக்கு வேட்டைக்காக கோட்டை விட்டார்களானால் அது அவர்கள் தம் தலையில் தாமே மண்ணை அள்ளிப் போடுவதாகப் போய்விடும்.

கரடிப் போக்கு சந்தி கடைகள்

கிளிநொச்சி மார்ச் 07 கிளிநொச்சி கரட்டிபோக்கு சந்தியில் கடந்த வருடம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து முற்றாக எரிக்கப்பட்ட கடைகளில் சில புதிதாக கட்டப்பட்டு வருகின்றது.

இதேவேளை முன்னர் சில குழுக்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த கடைகளும் தற்போது வியாபாரம் நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டு உள்ளது.

(இ—76)

யாழ் புவியியலாளன் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் மார்ச் 07 யாழ் பல்கலைக் கழகப் புவியியற் கழகத்தின் ஆண்டுச் சஞ்சிகையான "யாழ்ப்பாண புவியியலாளரின் 5 ஆவது இதழின் வெளியீடு இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கழகத் தலைவர் திரு. கே. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா ஆரம்பஉரை நிகழ்த்துவார்.

புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுக உரையும், பல்கலை. பதிவாளர் திரு. எஸ். கே. பரமேஸ்வரன் வாழ்த்துரையும், கலைபீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் வெளியீட்டுரையும், தாவரவியற் துறைத் தலைவர் பேராசிரியர் ரி. தெய்வேந்திரராஜா கல்வியியற்துறையைச்சேர்ந்த திரு. குணசிங்கராஜா ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவார்கள்.

கழகச் செயலாளர் எஸ். வான்மதி நன்றியுரை கூறுவார். (க)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விவசாயத்துக்கு முன்னுரிமை

புதுக்குடியிருப்பு, மார்ச் 7 ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இந்த ஆண்டு அபிவிருத்தி வேலைக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கே கூடுதலான நிதி முல்லைத்தீவு அரச அதிபரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்று கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை பாவித்து பொறித்தொகுதிகள் கட்டிக திருத்த வேலைகள், சிறு குளங்கள், கால்வாய்கள் திருத்தம் என்பன மேற்கொள்ளப்பட உள்ளன

முறுகண்டிக்குளம், ஐங்கன்குளம், சேகண்டிக்குளம், குஞ்சுக்குளம், சின்னத்தை மடுக்குளம், குஞ்சுப்பரித்தைக்குளம், பளம்பாத்க்குளம், பெரியபூவரசங்குளம், தட்டாமலைக்குளம், கரிப்பட்டை முறிப்புக்குளம், பெரியகுளம், நெல்லிமுறிப்புக்குளம், மணவாளன்பட்டை முறிப்புக்குளம். மியங்சிலிக்குளம், ஒதியமலைக்குளம் ஆகிய குளங்கள் திருத்தப்படவுள்ளன.

(சு—126)

சமய அரங்கத்தில்

இலட்சார்ச்சனை

சாவகச்சேரி மார்ச் 7 சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை தொடர்ந்து நடைபெறுகின்றது.

இலட்சார்ச்சனையின் பூர்த்திவிழா இம் மாதம் பத்தாம் திகதி மாசிமகப் பெரு விழாவாக இடம் பெறும்,

(இ-31)

நெல் கொள்வனவுக்கு வியாபாரிகள் தயக்கம்

சேமமடு, மார்ச் 7 இந்த ஆண்டில் வன்னிப் பிரதேசத்தில் எதிர் பார்த்த அளவு நெல் விளையவில்லை.

விளைந்த நெல்லை கொள்வனவு செய்வதற்கும் போதிய ஆட்களில்லை. இதனால் நெல் வியாபாரம் வன்னிப் பிரதேசத்தில் தேக்கம் அடைந்து உள்ளது.

கனகராயன்குளம், கரப்புக்குத்தி ஆகிய இடங்களில் ஓரளவு நெல் விளைந்துள்ளது.

ஆயினும் விளைந்த நெல்லைப்பெருந் தொகையாக வாங்குவதற்கு வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தோ வேறு இடங்களிலிருந்தோ வருவது இல்லையாம்.

விளைந்த நெல்லை ஐந்து பத்து மூடைகளாக வவுனியா நகரில் விவசாயிகள் விற்பதை அவதானிக்க முடிகின்றது.

(இ-37)

மீள நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 7 திரு. பெ. துரைராசா சுகாதாரப் பரிசோதகராக யாழ். மாநகர சபையில் மீள நியமனம் பெற்றுள்ளார்.

இவர் யாழ். மாநகரசபைப் பகுதியில் 19, 20, 21, 22, 23 ஆகிய வட்டாரங்களில் கடமையாற்றுவார். இவரது மீள நியமனம் வடக்கு கிழக்கு மாகாணசபையால் வழங்கப்பட்டுள்ளது.

இவர் முன்பு ஊர்காவற்றுறை சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றி இருந்தார். (இ-18)

கொள்ளைச் சம்பவங்களை அடுத்து

வவுனியா-அ'புரம் வீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7 வவுனியா – அனுராதபுரம் வீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வடபகுதி நோக்கி வரும் வாகனங்கள் இப்பகுதியில் கொள்ளையரின்கைவரிசைக்கு இலக்காவதன் காரணமாகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்தவாரம் இப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பாக சிலர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ஒ-10)

அடிக்கல் நடும் விழா

புதுகுடியிருப்பு மார்ச் 7 புதுகுடியிருப்பு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட உள்ள 2 மாடி கட்டிடத்திற்கு அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம் பெற்றது.

புதுக்குடியிருப்புக் கொத்தணி அதிபர் திரு. ச. நாகரட்ணம் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம், கட்டிடப் பரிசோதகர் ஜி. இரட்ணசிங்கம் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஏ. ஜி. காண்டீபன், புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் செ. எட்வேட், புதுக்குடியிருப்பு மேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. அ. சண்முகம் ஆகியோர் இந்த விழாவில் உரையாற்றினார்கள்.

(க – 126)

பரந்தன் தொழிற்சாலை திருத்த வேலைகள் துரிதம்

கிளிநொச்சி, மார்ச். 7 பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் தற்போது திருத்த வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

முன்னர் கூட்டுத்தாபனத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இந்த திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

புதிதாக எவ்வித நிதியும் ஒதுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தொழிற்சாலை இயங்குமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏன்எனில் கூட்டுத்தாபனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கியதால்தான் மூடப்பட்டது என்றும் ஆதலால் இதனைத் தொடர்ந்து இயங்குவது சாத்தியமில்லை என வும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் கூட்டுத்தாபன தலைவர் தொழிற்சாலை மிக விரைவில் இயங்கும் எனக் கூறியுள்ளார். (76)

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தம்மை பதிவு செய்கின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 7 கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் அரச உதவி பெற அரசு சார்பற்ற நிறுவனங்களாக யாழ்- அரசாங்க செயலகத்தில் பதிய ஆரம்பித்துள்ளன.

கால்நடை வளர்ப்போருக்கு ஊக்கமளிக்க பல லட்சம் ரூபா பணம் யாழ் அரசாங்க செயலகத்துக்கு வந்த போதும் கால்நடை வளர்ப்போர் அமைப்பு ரீதியாக இயங்காத காரணத்தால் உதவிகளை வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டது.

யாழ்- மாவட்டத்தில்உள்ள எட்டு மிருக வைத்தியர் பிரிவுகளிலும் முதலில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

அந்த சங்கங்கள் அரசு சார்பற்ற நிறுவனங்களாகத் தம்மை பதிவு செய்துவருகின்றன.

பருத்தித்துறை சங்கத்துக்கு முதல்தடவையாக ஒருலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அந்த சங்கம் தம் உறுப்பினர்களுக்கு 5000 ரூபா வீதம் கடன் வழங்கிவருகிறது.

(இ-3)

வாழைச்சேனை காகித ஆலை உற்பத்தி 34சதவீதம் வீழ்ச்சி

மட்டக்களப்பு மார்ச் 7 கடந்த வருடம் நாட்டின் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை, மின் விநியோகம் தொடர்ச்சியான துண்டிப்பு ஆகிய காரணங்களினால் வாழைச்சேனை காகிதஆலையில் காகித உற்பத்தி 34 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது.

இத் தகவலை காகித ஆலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

1988 இல் 4124 மெற்றிக் தொன் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டது.

1989 இல் இத் தொகை 4356 ஆல் அதிகரிக்க திட்டமிடப்பட்டது. ஆனால் சூழ்நிலை காரணமாக 2756 மெற்றிக் தொன்னே உற்பத்தி செய்யப்பட்டது.

இவ்வருடம் இதுவரை 192 மெற்றிக் தொன் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். (இ-21)

அனலைதீவு புறக்கணிப்பு

அனலைதீவு, மார்ச் 7 அனலைதீவுப் பாடசாலைகளில் பலவருடங்களாக வசதிக்கட்டண ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படவில்லை.

ஏனைய தீவகங்களிலிருந்து பலர் தெரிவான போதிலும் அனலைதீவிலிருந்து ஒருவரும் தெரிவுசெய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

(இ-18)

புதிய கட்டணவிகிதம்

குடா நாட்டின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிப்பு

குருநகர், மார்ச். 7 கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டத்தில் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் புதிய கட்டண விகிதங்களை குடா நாட்டின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

சங்கக் காப்பாளர் அ. ஞானப்பிரகாசடாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் செயலாளர் திரு. செ. சிவராசா உட்படப் பல சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அச்சுவேலிப் பகுதியின் கிளைச்சங்கத்தின் நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. சின்னத்துரை லோகநாதன், உப தலைவர்: திரு. க. ஸ்ரீதரன். செயலாளர்: திரு. செல்லையா கோபால், உப செயலாளர்: திரு. க. செல்வம், பொருளாளர்: திரு. கவரதராஜா. (51)

நெடுந்தீவு மக்களுக்கு முன்னுரிமை

நெடுந்தீவு மார்ச் 7 நெடுந்தீவு படகுச் சேவைக்கென புதிய படகுகள் இங்கு வந்துசேர இருப்பதால் இப்படகுகளில் பணியாற்றும் ஊழியர்கள் நியமன விடயங்களில் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களுக்கேமுன்னிரிமை வழங்கப்பட வேண்டும்.

யாழ் அரசாங்க அதிபர் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பிரதம பொறியியலாளர் ஆகியோரிடம் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் இப்படி வேண்டுகோள்விடுத்துள்ளது.

(இ-111)

யாழ் பல்கலையில்

தொழில்கல்வி பட்டப் படிப்பை ஆரம்பிக்க அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 7 யாழ் மாவட்டத்தில் தொழில் சார்ந்தவர்களுக்கு தொழில் கல்வி பட்டப் படிப்பை யாழ்பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்க தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி பலகாலமாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விடுத்து வருகிறது.

ஆனால் பல்கலைக்கழக ஆணைக்குழுவோ இந்த துறையை ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்காமல் இழுத்தடித்து வருவதாக பல்கலைக் கழக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (சு-3)

வாசகர் திருமுகம்

தனியார் கல்வி நிறுவனங்கள்

கடந்த சில வாரங்களாக தனியார் கல்வி நிறுவனங்களின் குறைபாடுகள் பற்றிய கருத்துக்களை பத்திரிகைகளில் பார்த்த ஒரு மாணவன் என்ற ரீதியில் தனியார் கல்வி நிறுவனத்தின் அவசியத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாடசாலையில் கல்வியைப் பெறும் மாணவன் அந்தக் கல்வியில் முழுமையான திருப்தியைப் பெற்றால் ஏன் தனியார் கல்வி நிறுவனத்தை நாட வேண்டும்.

பாடசாலையில் சிறந்த ஒரு ஆசிரியர் இருப்பாரே ஆயின் அது அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவருக்கு மட்டுமே பயன்தரும். ஆனால் அந்த ஆசிரியர் தனியார் கல்வி நிறுவனத்தில் கற்பிப்பதனால் பரவலாக மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

மாணவன் த. யோகராஜா
திருநெல்வேலி

பாடப் புத்தகங்கள்

இன்று அரசினால் வழங்கப்படும் பாடப்புத்தகங்களின் உள்ளடக்கம் மாணவர் தரத்திற்கும் வயதிற்கும் பொருத்தமற்றதாக காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ் மொழிப் பாடநூல்களிலுள்ள விடயம் குறிப்பிட்ட தரங்களிற்கு மேற்பட்டவையாக இருப்பதை கல்விப் போதனையில் ஈடுபட்டுள்ளோர் உணர்வர்.

பாடநூல்கள், எழுதுவோரின் அறிவுத் திறமையை எடுத்துக் காட்டுவதாக இல்லாமல் மாணவரது வளர்ச்சிக்கும் வயதிற்கும் ஏற்றவையாக அமைய வேண்டுமென்பது உளவியளாளரின் கருத்தாகும். சில பாடப்புத்தகங்கள் மாணவருக்கு மாத்திரமன்றி ஆசிரியர்களுக்கும் மயக்கத்தை கொடுப்பனவாக இருக்கின்றன.

இன்னொரு விஷயம் இலங்கை முழுவதுமுள்ள மாணவர்கள் ஒரே பொதுப் பரீட்சைக்கு தயார் செய்யப்படும்போது தமிழ் மாணவருக்குரிய பாட நூல்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமை தமிழ் மாணவரது கல்வியைப் பாதித்துள்ளது. பரீட்சையமையமாக கொண்ட கல்வி அமைப்பில் பாடநூல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. 1990 ஆம் ஆண்டுக்குரிய பாடநூல்கள் முதலாம் தவணை முடிவடையும் நிலையிலேயே வழங்கப்படவுள்ளன இதுவும் மாணவர் கல்விவளர்ச்சியைப் பாதிப்பதாகும். எனவே கல்வியோடு தொடர்புடைய அதிகாரிகள் அக்கறை எடுத்து ஆண்டு ஆரம்பத்திலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

ம. கமலதாஸ்
நயினாதீவு.

கண்டதும் கேட்டதும்

யாழ்ப்பாணத்தில் பிரியாவிடை வைபவம் என்றால் முன்னைய காலங்களில் பொதுக் கூட்டம் மேளதாளத்துடன் ஊர்வலம் பட்டாஸ் ஆரவாரம் இவை எல்லாம் சர்வசாதாரணம்.

ஆனால் இவை கடந்த காலங்களில் அருகி இருந்த போதிலும் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன.

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கடந்த 42 வருடங்களாக கடமையாற்றி ஓய்வு பெற்ற உப அதிபர் திரு. எஸ். இராஜதுரைக்கும், 20 வருடங்களாக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.டி.ஏ.ரி. தம்பிநாயகத்துக்கும் நடந்த பிரியாவிடை விழாவில் மாலை மரியாதைகளுடன் மேளதாளங்களும் முழங்கின. ஊர்வலம் சென்ற பாதைகளில் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆரார்த்தியும் எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதையே இது காட்டுகிறது.

—செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நேற்றைய புதிய வெளியீடு!
★ பிரபு ★ ரேவதி ★ ஜனகராஜ்
"அரங்கேற்ற வேளை" (ஒறிஜினல்)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3500)

★ கொம்பியூட்டர் கல்வி ★
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE
பயிற்சிக் காலம் 3 மாதம்

இடம்:	ஆரம்ப திகதி, நேரம்:
1. பருத்தித்துறை (வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக)	12-03-90 திங்கள் மாலை 2 மணி
2. வல்வைக் கல்வி மன்றம் (வல்வெட்டித்துறை)	14-03-90 புதன் பகல் 12 மணி

I.B.M (Compatible) இல் பயிற்சி வழங்கப்படும்
Computer Instructor (பெண்) பதவிக்கு
Director. Computer Centre, VVT என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.
[2738]

KALALAYAAH கலாலயா
DIPLOMA IN HOME ECONOMICS

Cake Icing	Hair Styling
Cookery	Flower-Making
Needle Work	Glass & Fabric Painting
Handicraft	Kolam

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
புதிய வார நாள் வகுப்புக்கள்
ஆரம்பம்: 09-03-90
தொழில் புரியும் பெண்களின் வசதி கருதி
ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 11-03-90
★ கலாலயா ★
நுண்கலை, மனையியல் நிறுவனம்
விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்ப்பாணம்.
[சி-3497]

மூன்றாண்டு நினைவஞ்சலி

திரு. மாணிக்கம் ஜெயசிங்கம்

தோற்றம்: 26 - 03 - 1966 மறைவு: 07 - 03 - 1987

நீ மறைந்து மூன்றாண்டு
நிலவுமிந்த வேளைதனில்
நாம் மறந்து போவோமா
நீ செய்த கடமைகளை
அன்பின் ஜெயாவே
தாய் வருந்தி தத்தளிக்கும்
தாங் கொண்ணாச் சோகநிலை
நீ அறியாய் ஜெயாவே

உன் பிரிவால் துடிக்கும்
தாய், அண்ணா, தங்கை,
மைத்துனன், மருமகள்,
நண்பர்கள்.

கைதடி வடக்கு,
கைதடி.
[12006]

பயிலுநர்———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூ அதிபர் பிரிவு, மன்னார் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு ஆகியபகுதிகளிலிருந்து தெரிவான பயிலுனர் ஆசிரியர்களுக்கு பிற்பகல் 1 மணிக்கும் மன்னார் அல் அஸார் மகாவித்தியாலயத்தில் வைத்து தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

அங்குரார்ப்பண வைபவமும் அன்றே நடைபெறும் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் சமூகம் தரும்படி மன்னார் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

15 ஆம் திகதி காலை 9 மணிக்கு பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்கஅதிபர் பிரிவு, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவானோருக்கும், பிற்பகல் 1 மணிக்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் [கிளிநொச்சி, கண்டாவளை] தெரிவானோருக்கும் தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

அதே தினத்தில் சேவை அங்குரார்ப்பணமும், மேற்கொள்ளப்பட உள்ளது.

இவை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் வைத்து மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் மேற்கண்ட அறிவித்தலை விடுத்துள்ளார்.

(இ-9)

மேன் முறையீடு ----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடுவில் பிரிவுக்கு பதின்மூன்றாம் திகதியும், கோப்பாய்ப் பிரிவுக்கு பதின்நாலாம் திகதியும் விசாரணைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

MCC
11B, Momsac Building,
Stanley Road,
JAFFNA.
I. A. B.
(London)
(All Stages)
By
K. C. Satiyamoorthy
From: 15-03-90
Also At:
Wellknown Centre
Station Road,
KONDAVIL.
[C-3482]

யாழ். மாவட்டத்துக்கு
இடமாற்றம் பெற்ற 23 ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற 23 ஆசிரியர்களின் பாடசாலை விவரம் அடங்கிய பட்டியல் ஒன்று நேற்று யாழ். கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டது.

அப்பட்டியல் விவரம் வருமாறு:-

குருநாகல்

எஸ். சந்திரமோகன் (யாழ். மத்திய கல்லூரி), திருமதி எஸ். சத்தியபவானி (கலட்டி மெ. மி. த க. பா.), கே. எஸ். சத்தியமூர்த்தி (மகாஜனா), செல்வி ஜே. நிமல்டா (உசன் இராமநாதன்), செல்வி ஐ. சின்னத்துரை (சாவகச்சேரி மகளிர்).

காலி

வீ. இராமகிருஷ்ணன் (வட்டு இந்து).

பதுளை

கே. ஜெயராசா (சண்டிலிப்பாய் வடக்கு அ. த. க).

அநுராதபுரம்

செல்வி ஜே. எம். மொஹிதீன் (முகமதிஜா முஸ் ம.).

கேகாலை

திருமதி எஸ். சுதாகரி (சாவகச்சேரி இந்து).

கொழும்பு

திருமதி ஜே. பி. முகமது (ஆனைக்கோட்டை றோ. க. த. பா.), திருமதி ஏ. தர்மலிங்கம் (இணுவில் சைவப் பிரகாச), செல்வி கே.கோணேஸ்வரி (மல்லாகம் ம. வித்.), கே. சுதிர்காமநாதன் (நவாலி ம. வி.); செல்வி ஐ. புஷ்பராணி (யூனியன் கல்.), ஜி. விஸ்வதேவி (வேம்படி), கே' கே. சுந்தரலிங்கம் (கைதடி முத்துக்குமாரசாமி).

களுத்துறை

செல்வி பாலஜெயந்தி பாலசிங்கம் (மானிப்பாய் மகளிர்).

கம்பஹா

செல்வி. கே. புண்ணியவதி (கொக்குவில் நாமகள்)

நுவரெலியா

செல்வி. வீ. இரத்தினேஸ்வரி (அராலி ஏ. எம். ரி.) திருமதி ஆர். சுப்பிரமணியம் (சாவகச்சேரி இந்து) எஸ். சிவதர்சினி (ஏழாலை ம. வி), செல்வி. எஸ். சின்னத்தம்பி (விடத்தற்பளை கமலாசனி) எஸ். கணபதிப்பிள்ளை (உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

(இ-3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1913 - 08 - 20
●
உதிர்வு: 1989 - 02 - 16

திரு. சி. சுப்பிரமணியம்
(இளைப்பாறிய போமன்)

என்றும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

சுந்தரோடை, சுன்னாகம்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. சின்னத்துரை சோதிநாதன்
அன்னையின் மடியில்: 24-06-1942
ஆண்டவன் அடியில்: 04-02-1990

திருமதி ஜெயரூபி சோதிநாதன்
அன்னையின் மடியில்: 20-10-1944
ஆண்டவன் அடியில்: 20 10-1987

நுணையின் பிரிவால் துயருற்ற அன்புச் செல்வங்களான சுமூகன், சுபாசினியை விட்டு மரணத்தில் இணைந்து கொண்ட சின்னத்துரை சோதிநாதனின் (Supt of works - புத்தளம்) அந்தியேட்டிக் கிரியைகளும், அவரின் மனைவி ஜெயரூபி சோதிநாதனின் ஆத்மசாந்திக் கிரியைகளும் 7 - 3 - 90 புதன்கிழமை உரும்பராய் கிழக்கு அவர்களது இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவர்களின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகளும், சகோதரர்களும், பெற்றோரும், உறவினர்களும்.

T. ஜெகநேசன்,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
[சி/3489]

சனிமாற்றம்
20-03-90 இல் நிகழும் சனிமாற்றத்தால் ஏற்படும் பலாபலன்களை அறிய வாங்குங்கள்!
சனிப்பெயர்ச்சி பலாபலன்கள்
(12 இராசிகளுக்கும் ஒரே புத்தகம்)
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
விலை ரூபா 7.00 மட்டுமே
வெளியீடு:
திருக்கணித நிலையம்
மட்டுவில், சாவகச்சேரி. (2735)

French Language Course
பிரென்ஞ் மொழி வகுப்புகள்
(யாழ் பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கத்தில்)
For Beginners and others. Term Commences on 10th March Saturday at 9 a.m.
Information and Registration
Alliance Francaise de Jaffna
130, 1st Cross Street,
JAFFNA.
[சி-3466]

உலக பண்பாட்டு இயக்க
15 ஆவது ஆண்டு நிறைவு மகாநாடு
மாபெரும் கண்காட்சி
கண்காட்சிக்கு ஈழத்து நாவல்கள், பத்திரிகை, சிற்பங்கள், ஓவியங்கள், கைப்பணிப் பொருட்கள் போன்றவை இடம்பெறும்.
ஈழத்து எழுத்தாளரும், மாணவர்களும், நிறுவனங்களும் பங்குபற்றலாம்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
கண்காட்சி பொறுப்பாளர்
M. ஜெயந்தன்.
விக்னா டியூசன் சென்ரர்,
(சி/3494) 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

வெளிவந்து விட்டது
இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி 1948 — 1956
வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்
ஆசிரியர்: வி. நித்தியானந்தன்,
தலைவர், பொருளியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
வெளியீடு: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
நூல் கிடைக்கும் இடம்:
மண்டேலா ரேடர்,
(புத்தகசாலை)
இல. 2 பஸ் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
விலை ரூபா 150/-
[12001]

உடனடி வேலைவாய்ப்பு
ஈராக் நாட்டில் கட்டிட வேலைத் தொழிலாளர்கள் தேவை.
வயது: 18 வயதிற்கு மேல்
சம்பளம்: 4000 ரூபா (இலங்கைக்கு அனுப்பக் கூடியது)
ஒப்பந்த காலம்: 2 வருடங்கள் மேலும் 2 வருடங்கள் புதுப்பிக்கக் கூடியது.
★ இருப்பிடவசதி, உணவு, வைத்தியவசதி அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.
★ விருப்பமானவர்கள் பாஸ்போட்டுடனும் 10 பாஸ்போட் அளவு படத்துடனும் உடனடியாக வக்ஸ் சோல் மில் கோப்பரேசனின் பிரதிநிதியாகிய திரு. மூர்த்தி அவர்களை கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்,
உடனடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளும் முகவரி:
No. 15, டாம் வீதி,
ஐந்து லாம்பு சந்தி, கொழும்பு - 12
TP. 432221
[12002]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் தேர்தலில் போட்டி- - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் முதல் தடவையாக விடுதலைப்புலிகள் கையில் இருக்கின்றது.

கேள்வி: ஈழவர் ஜனநாயக முன்னணி எதை எதிர்பார்க்கிறது?

பதில்: ஈ. பி. ஆர். எல். எவ் சகலதையும் இழந்து விட்டது. இலங்கை அரசு – விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் நடத்துகின்றனர். விடுதலைப் புலிகளிக்குக் கூடுதல் அதிகாரங்கள் கிடைக்கலாம்.

இலங்கை அரசு எம்மை மீண்டும் ஏமாற்ற முனைந்தால் நாம் மீண்டும் போராடுவோம். விடுதலைப் புலிகள் இரண்டுக்கும் தயாராகவே உள்ளனர் என நான் நினைக்கின்றேன்.

கேள்வி: இலங்கை அரசு உண்மையான முறையில் நடந்து கொள்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகிறவர் போல்தான் ஜனாதிபதி பிரேமதாசாவின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால் அவரின் சொந்த நிலையை உறுதிப்படுத்துவது மட்டுமல்ல: எமது விவகாரத்தில் இந்திய செல்வாக்கு இடம்பெறுவதை தடுக்கவும் அவருக்கு இயலும்.

இதனால் ஏற்படும் அமைதி நிலையைப் பயன்படுத்தி அவர் கூடுதல் வெளிநாட்டு உதவிகளைப் பெறுவார். இதுதான் அவருக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது.

கேள்வி: விடுதலைப் புலிகள் இப்போது அரசியலுக்கு வந்துவிட்டார்கள். அரசியல்வாதிகள் என்ற முறையில் அவர்கள் முதிர்ச்சியைக் காட்டுகின்றார்களா?

பதில்: அமைதிப்படைக்கு எதிரான இருவருட போராட்டம் அவர்களை முதிர்ச்சியடைய வைத்துள்ளது என்று நான் எண்ணுகின்றேன். விடுதலைப்புலிகள் இப்போது தங்கள் இலக்குகள் குறித்து நம்பிக்கை உணர்வோடு இருக்கிறார்கள்.

இலங்கை அரசுடனும் இந்தியப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் ராஜதந்திரத்தைப் பாருங்களேன்.

அதேநேரத்தில் இராணுவரீதியில் என்றுமில்லாத அளவு வலிமையாக இருக்கிறார்கள் விடுதலைப்புலிகள்.

கேள்வி: ஈழவர் ஜனநாயக முன்னணி (Fnace Sitters) மதில்மேல் இருப்பவர்களாக கருதப்பட்டனர். இப்போது விடுதலைப்புலிகளுடன் சமாதானம் பேண விரும்புகிறீர்கள்? உங்களையும் விடுதலைப் புலிகள் முடித்து விடுவார்கள் என்று அஞ்சுகிறீர்களா?

பதில்: எமது மிகப்பெரிய தவறு ஆயுதங்களைக் கைவிட்டதுதான். எல்லா ஆயுதக் குழுக்களின் தயவிலும் நாம் இருக்கவேண்டிய தாயிற்று. இருவருடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை நாம் இழந்தோம்.

எமது நடவடிக்கைகளினால் விடுதலைப்புலிகளை நாம் பகைத்துக்கொண்டோம்.

எமது நிலைப்பாடு முன்னேற்றம் பற்றி நாம் இப்போது மீளாய்வு செய்கின்றோம். இதுபற்றி விடுதலைப் புலிகளுக்கு விளக்கம் அளிக்க இருக்கிறோம்.

கேள்வி: அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று உங்கள் மக்கள் உண்மையிலேயே விரும்புகிறார்களா? அமைதிப்படை இன்றி பாதுகாப்பாக இருக்க முடியும் என்று உணர்கிறார்களா?

பதில்: அமைதிப்படை விலகிய தினமே இலங்கைப் படை மீண்டும் தாக்கும் என்று மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அதனால் அமைதிப்படையின் சில பிரிவுகளாவது தங்கியிருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

அமைதிப்படை போகத்தான் வேண்டும் என்று விடுதலைப்புலிகள் கூறியதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் நிலையை மக்களும் ஏற்றனர்.

எப்படியாயினும் முக்கியமானது என்னவென்றால் இலங்கைப்படையினர் பாசறைக்குள் இருப்பதுதான். இதற்கான பெருமை விடுதலைப்புலிகளுக்கே போகவேண்டும்.

கேள்வி: அமைதிப்படை பற்றி நீங்கள் நல்லதாகச் சொல்ல ஒன்றுமில்லையா? உங்களுக்கு அவர்கள் என்ன செய்தார்கள்?

பதில்: அமைதிப்படை ஜவான்களின் வாழ்க்கை ஒரு பெரிய துக்ககரமான விஷயமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரியாவிடை நிகழ்ச்சி கூட அவர்களுக்கு நடத்தப்படவில்லை. போராளிகள் என்ற முறையில் நாம் அவர்களுக்காக வருத்தப்படுகின்றோம்.

ஆனாலும் அவர்கள் கேட்கட்டும். யாருடைய யுத்தத்தில் அவர்கள் சண்டையிட்டார்கள்.?

முழு அமைதிப்படை நடவடிக்கை சம்பந்தமாக நீங்கள் விசாரணை ஒன்றை நடத்த வேண்டும்!

கேள்வி: இதன் பின்னர் இந்தியா என்ன பங்கு வகிக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: இந்த விஷயம் குறித்து இந்தியா விமர்சக நோக்குடன் மீளாய்வு செய்ய வேண்டும்.

தமிழர்களின் நலன்கள் குறித்து உண்மையான போக்குடன் தனது நடவடிக்கைகளில் ஏற்பட்ட தவறுகளை திருத்திக்கொள்ள இந்தியா முன்வரவேண்டும்.

கேள்வி: ஈ. பி. ஆர். எல். எவ். வின் ஆட்சி முடிந்து விட்டதா?

பதில்: அது சுவரில் எழுதப்பட்டுவிட்டது. அதனை ஈ. பி. ஆர். எல். எவ். பார்த்தது போல் தெரியவில்லை பதவியில் இருந்து விலக ஈ. பி. ஆர். எல். எவ். விரும்பவில்லை. ஆனால் அதற்கு வேறு வழியே இல்லை.

கேள்வி: விடுதலைப்புலிகள் தேர்தலில் போட்டியிட்டால் அதற்கு எதிராக ஈழவர் ஜனநாயக முன்னணி போட்டியிடுமா?

பதில்: எல்லா அமைப்புக்களும் தேர்தலில் போட்டியிட முடியும். ஆனால் அவர்களால் வெல்ல முடியாது; ஏனெனில் மக்கள் ஆதரவை விடுதலைப்புலிகள் மட்டுமே பெறுவார்கள். நாம் எதிர்க்க மாட்டோம். தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற அக்கறை எமக்கு இல்லை.

கேள்வி: இந்தியாவின் கருத்தைக் கேட்டு தேர்தலில் போட்டியிட்டது குறித்துஉங்கள் கட்சி மீது திரு. பிரபாகரன் கோபம் கொண்டுள்ளார் போல் தெரிகிறது.

பதில்: இந்தியாவின் கணிப்பிற்கு இணங்க எமது எதிர்காலத்தைத் திட்டமிட்டதால் நாம் தோல்வி கண்டோம். இதனால் விடுதலைப் புலிகளின் கோபத்துக்கு ஆளானோம். ''அமைதிப்படையை எதிர்த்துப் போராட எம்முடன் ஏன் சேரவில்லை?'' இப்படித்தான் திரு. பிரபாகரன் எம்மைக் கேட்டார். அவரை விரைவில் சந்திப்போம் என்று நாம் நம்புகிறோம்.

நாம் சொல்வதைக் கேட்டு எம்மை ஏற்றுக்கொள்ள அவர் முன்வரலாம்; ஆனால் இதர குழுக்களை அல்ல.

சாராய----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் போதுமான அளவு கூட்டுத்தாபனத்துக்குகிடைக்காமையே இதற்குக் காரணமாகும்.

கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்யும் கள்ளின் விலையை அண்மையில் ரூபா 2- 50 லிருந்து ரூபா 3- 50 ஆக அதிகரித்ததைத் தொடர்ந்து தற்போது உற்பத்தியை அதிகரிக்கக்கூடியதாகஇருக்கிறது.

கடந்த வருடம் கள்ளிறக்குவதற்காக 22 ஆயிரம் தென்னை மரங்களுக்கே அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. ஆனால் இவ்வருடம் 45 ஆயிரம் தென்னை மரங்களில் இருந்து கள்ளிறக்க அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பித்துள்ளனர்—என்றார். (ஒ-து)

ஈரோஸின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இயக்கத்தைச்சேர்ந்த சிலர் இயக்கத்தின் நன்மைகருதித் தாமாகவே ஒதுங்கியிருக்க முன்வந்ததாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ)

தமிழ் ஈழப்பிரகடனம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லர்.

வரதராஜப்பெருமாளின் மாகாணசபை நிர்வாகம் ஜனநாயகரீதியாக அமைந்த அரசியல் ஆட்சி அல்ல. ஆனால் முன்னைய இந்திய அரசினாலும் இந்திய அமைதிகாக்கும் படையினாலும் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகம் தற்போது முற்றிலும் செயலற்றுக் கிடக்கிறது.

வெகு விரைவில் இந்திய அமைதிகாக்கும் படையினர் இங்கிருந்து முற்றாக வெளியேறிய பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணசபை வீழ்ச்சி அடைவது தவிர்க்கமுடியாதாகிவிடும்.

திரு. வரதராஜப்பெருமாள் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தை எதிர்க்கும் ஒரு நிலையை ஏற்படுத்தி தனது அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருக்கும் நோக்கத்திற்காகவே இப்பிரகடனத்தைச் செய்திருக்கிறார்.

இந்த பிரகடனத்தின் மூலம் மாகாணசபையை அவர் கலைக்கிறார் என்பதை ஊகித்துக்கொள்ள முடியும்.

இத்தகைய இயக்கங்களைப் போலன்றி தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினர் 17 ஆண்டுகளாக தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர்.

தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்ற வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றினைக் காணும் நோக்கத்துடன் ஜனாதிபதியுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி வருகிறது. விடுதலைப் புலிகள் தமிழ்பேசும் மக்களின் பூரண ஆதரவையும் பெற்றுள்ளார்கள்.

புதிதாகத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் இந்த உண்மை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படும்.

ஜனாதிபதியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமான ரீதியில் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் இருக்கின்றதனால் நல்ல பலாபலன்களைப் பெறமுடியும்.

தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு பேச்சுவார்த்தைகள் உதவும் என்ற நம்பிக்கை இருக்கின்றது – என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

நெஸ்பிறே குழந்தைகளுக்கு மட்டும்

ஒவ்வொரு நெஸ்பிறே குழந்தையும் இந்தப் பதக்கத்தைப் பெறலாம்.
4 நெஸ்பிறே பக்கெட் மேலட்டைகளை வெட்டியெடுங்கள். அவை மஞ்சள்-பச்சை அல்லது மஞ்சள்-சிவப்பு பக்கெட்டுகளின் அல்லது இரண்டும் கலந்த அட்டைகளாக இருக்கலாம்

உங்கள் நெஸ்பிறே பதக்கத்தைப் பெறுங்கள்

இவற்றோடு கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். உங்கள் முகவரி எழுதப்பட்டு ரூ.1 - முத்திரையிடப்பட்ட கடித உறையையும் இணைக்கவும்.
மேலதிக கூப்பன்களை நீங்களே தயாரிக்கவும். விரைவுங்கள். இன்றே மேலட்டைகளைச் சேகரிக்கத் தொடங்குங்கள். கையிருப்பு உள்ள வரையே இந்த வெகுமதி.

4 நெஸ்பிறே பக்கெட் மேல் அட்டைகள் இணைத்துள்ளேன். எனக்குரிய நெஸ்பிறே பதக்கத்தை அனுப்பவும்.

பெயர்:_____
முகவரி:_____
_____
_____ வயது:_____
பாடசாலை:_____

முகவரி: நெஸ்பிறே வானவில் பதக்கம்
தபால் பெட்டி 2061 கொழும்பு

ரூ.50/-

போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.
(யாழ்/ பெரியாஸ்பத்திரி)

கேள்வி விளம்பரம்

சலவை ஒப்பந்தம் 1990—1991

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அமுக்குத் துணிகளை 1990- 4 -1 தொடக்கம் 1991-3-31 வரை சலவை செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் 1990- 3- 22 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/- ஐ வைத்தியசாலை காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம்-

கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதி முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத்திகதியன்று காலை 10 மணிக்கு பின் வரும் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் பிணைப் பணமாக ரூபா 1500/- ஐச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திரும்பக்கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் மார்ச் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்கவும்.

மேலதிக விபரங்களை இவ்வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சிவலிங்கம்,
கணக்காளர்:

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
01- 03- 1990 (சி/3491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"

உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம். உங்கள் நன்பனாகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

Period-Months காலம் - மாதம்	Cost of Certificate சான்றிதழின் பெறுமதி				Rate வட்டி வீதம்
06	4,588/-	9,175/-	45,872/-	91,744/-	18%
12	4,133/-	8,265/-	41,323/-	82,645/-	21%
24	3,379/-	6,757/-	33,784/-	67,568/-	24%
Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி	5,000/-	10,000/-	50,000/-	100,000/-	●

நிலையான வைப்பு TERM DEPOSIT

Period – Months காலம் – மாதம்	Monthly மாதாந்தம்	Maturity முதிர்ச்சியில்
03	–	17%
06	15%	18%
12	19%	20%
24	21%	23%
36	22%	24%

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

	1986/87	1987/88	1988/89
மூலதனமும் ஒதுக்கமும்	11,342,354	14,354,927	23,306,911
வைப்புகள்	100,577,492	110,897,760	116,890,354
வங்கிக் கடன்கள்	7,718,284	6,539,639	11,364,064
மொத்தச் சொத்துகள்	127,175,677	143,822,862	162,239,787
வைப்பாளருக்கு செலுத்திய வட்டி	16,880,875	20,025,480	20,833,024
வரி செலுத்திய பின் நேரிய இலாபம்	2,330,012	3,148,350	2,867,657
பகிரப்பட்ட இலாபம்		1,775,100	1,508,110

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ஈ. கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலகப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ன,
A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலகப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பிறைவேட் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER

இஸ்ரவேல் - பலஸ்தீனியர் பேச்சு முயற்சி நெருக்கடியில்!

ஜெரூசலம், மார்ச் 6

இஸ்ரவேல் அரசுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே பேச்சுக்களை ஆரம்பிக்கும் அமெரிக்கத் திட்டத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இஸ்ரவேல் அமைச்சரவையில் உள்ள தொழிற்கட்சி லிக்குவிட்கட்சி ஆகியனவ இடையே ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடே இதற்குக் காரணமாகும்.

இரண்டு நிபந்தனைகளை தொழிற்கட்சி ஏற்றால்தான் பலஸ்தீனியர்களுடன் பேச்சுக்கள் நடத்த சம்மதிப்பதாக லிக்குவிட் கட்சி அறிவித்திருக்கிறது.

★ கிழக்கு ஜெரூசலத்தைச் சேர்ந்த பலஸ்தீனியர்களின் பிரதிநிதிகள் பேச்சுக்களில் பங்கு பற்றக்கூடாது.

★ பேச்சுக்களில் பங்குபற்றும் பலஸ்தீனியர்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகள் என்று தங்களை அறிவிக்கக்கூடாது.

இவையே அந்த நிபந்தனைகளாகும்.

இஸ்ரவேலுடனான நேரடிப் பேச்சுக்களில் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் மட்டுமே பங்குபற்ற வேண்டும்: வேறு எவரும் பங்குபற்ற முடியாது என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

லிக்குவிட் கட்சியின் நிபந்தனைகளை ஏற்கும் நிலையில் தொழிற்கட்சி இல்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இதே வளையில்—

இஸ்ரவேலின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு ஜெரூசலம் ஆக்கிரமிக்கப்பட்டபகுதி என்ற தனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று அமெரிக்கா மீண்டும் தெளிவுபடுத்தி உள்ளது. (எ)

தி. மு. க. தலைமையில் புதுவையில் புதிய ஆட்சி!

பாண்டிச்சேரியில் நாளை (வியாழன்) தி. மு. க. ஜனதாதள் கூட்டு அமைச்சரவை பதவி ஏற்கிறது.

தி. மு. க. வைச் சேர்ந்ததீ. டி. இராமச்சந்திரன் தலைமையில் அமையும் அமைச்சரவையில் ஜனதாதள் உறுப்பினர்களும் இடம்பெறுகின்றனர்.

சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒரு வேட்பாளரின் ஆதரவோடு தி. மு. க. – ஜனதாதள் அணி ஆட்சியைப் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (எ)

சோவியத் அணுமின் உலை பாகிஸ்தானுக்கு கிடைக்கும்!

இஸ்லாமபாத் மார்ச் 6

பாகிஸ்தானுக்கு அணு உலை ஒன்றை வழங்குவது குறித்து சோவியத் யூனியன்பரிசீலனை செய்து வருகிறது.

இத்தகவலை இஸ்லாமபாத்தில்உள்ள சோவியத் தூதர் திரு.வி. பி. யக்குணின் வெளியிட்டார்.

பாகிஸ்தான் அரசு சோவியத் யூனியனுக்கு இது சம்பந்தமான வேண்டுகோளை 1988ஜூலில் விடுத்திருந்தது.

சோவியத்தில் செர்னோபில்அணு உலை விபத்தைத் தொடர்ந்து, பாகிஸ்தான் கேரரிக்கை பற்றி நடவடிக்கை எடுப்பதை சோவியத் அரசு தாமதித்து வந்தது.

பாகிஸ்தானுக்கு அணு உலை ஒன்றை கொடுப்பது சம்பந்தமான விஷயத்தில் உள்ள ஆபத்துபற்றியும் சோவியத் அரசு பரிசீலனை செய்து வருவதாகவும் திரு. யாக்குனின் சொன்னார். (எ)

அதிபர் புஷ் மறுப்பு

நியூயார்க், மார்ச். 6

லெபனானில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள ஒன்பது அமெரிக்கப் பிரசைகளையும் விடுவிக்க ஈரானுடன் அமெரிக்க இரகசியப் பேச்சுக்கள் நடத்தி வருவதாகக் கூறப்படும் செய்தியை அதிபர் ஜோர்ஜ் புஷ் மறுத்திருக்கிறார்.

இம்மாத இறுதியில் பணயக்கைதிகளை விடுதலை செய்யும் வாய்ப்பு உண்டு என்று கூறிய அதிபர் புஷ் இது சம்பந்தமாக பேச்சுக்கள் ஈரானுடன் நடத்தப்படவில்லை என்று சொன்னார். (எ)

ஆயிரம் அரசியல் கைதிகள் விடுதலை

ஆயிரத்துக்கு அதிகமான அரசியல் கைதிகளை தென்கொரிய அரசு விடுதலை செய்தது.

இவர்களில் 22 இடதுசாரி பிரமுகர்களும் இருந்தனர். இவர்கள் வடகொரியாவுக்காக உளவு பார்த்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். (எ)

மண்டேலா உபதலைவர்

லுஸாக்கா, மார்ச் 6

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் உபதலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.

காங்கிரஸின் தலைவராக திரு. ஒலிவர் டம்போ இருக்கிறார்.

ஜோஹன்னர்ஸ் பேர்கில் காங்கிரசின் தலைமையத்தை மீண்டும் திறப்பது என்று காங்கிரஸின் செயற்குழு மேலும் தீர்மானித்தது. (எ)

இந்தியாவுக்கு விஜயம் செய்ய பாக். ஜனாதிபதிக்கு அழைப்பு!

இஸ்லாமபாத் மார்ச் 6

இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி பாகிஸ்தான் ஜனாதிபதிகுலாம் இஷாக் கானுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் மௌலானா கௌஸர்நியாஸி ஜனாதிபதியை சந்தித்து முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

மௌலானா நியாஸா அண்மையில் புதுடில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங். வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் ஆகியோரைச் சந்தித்து பேசினார்.

அதன் பின்னரே அவர் ஜனாதிபதி குலாம் இஷாக்கானைச் சந்தித்தார்.

ஜனாதிபதியின் தூரதிருஷ்டி காரணமாக பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாமல் இருப்பதாக மௌலானா நியாஸி தெரிவித்தார்(எ)

உடன்பாடு இல்லை

வாஷிங்டன், மார்ச் 6

சர்வதேச நாணய நிதியத்துக்கு நிதி உதவி செய்யும் விஷயத்தில் முன்னணி நாடுகளும் அமெரிக்காவும் உடன் பாட்டுக்கு வரத்தவறி விட்டன.

மூன்றாம் உலக நாடுகளுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் நிதி உதவி வழங்குவதற்கு எவ்வளவு தொகையை ஒதுக்குவது என்பது குறித்து வருகிற ஜூன் மாதக் கடைசியில் விவாதிப்பது என்று இந்த நாடுகள் தீர்மானித்து உள்ளது. (எ)

காஷ்மீர்குறித்து அமெரிக்கநிலை புஷ்ஷுக்கு சிங் பாராட்டு

புதுடில்லி, மார்ச். 6

பாகிஸ்தானுடனான பிரச்சினைகளில் இந்திய நிலைப்பாடு குறித்து அமெரிக்க அதிபர் கொண்டிருக்கும் புரிந்துணர்வுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் வி. பி. சிங், அதிபர் ஜொர்ஜ் புஷ்ஷுக்கு அனுப்பிய கடிதத்தில் இப் பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு சிம்லா உடன்படிக்கை அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிப்பதில் அமெரிக்கா புதுடில்லியுடனும் இஸ்லாமாபாத்துடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பனை மக்கள் மீண்டும் குடியேற்றம்

சேமமடு மார்ச் 7 வவுனியா மாவட்டம் சின்னத்தம்பனையில் இருந்து இடம் பெயர்ந்த 76 குடும்பங்கள் மீண்டும் அவ்விடத்துக்குச் சென்று குடியேற இருக்கின்றனர்.

சின்னத்தம்பனைக்கு அருகேயுள்ள 8 ஆம் யூனிட், தம்பன்னாக்குளம், பெரிய குளம் ஆகிய இடங்களில் இருந்த சிங்கள மக்களாலும், இலங்கை இராணுவத்தினராலும் 3 வருடங்களுக்கு முன் இவர்களின் வீடுகள் எரிச்சப்பட்டிருந்தன. (இ- 37)

★ சவுதி அரேபியப் பிரயாணம் ★

1. Plumber — 550 SR
2. Sewerage Treatment Technician — 750 SR
   (கழிவு நீர் சுத்திகரிப்பு உத்தியோகத்தர்)
3. Pest Control Technician — 750 SR
   (கிருமிநாசினி கட்டுப்படுத்தும் உத்தியோகத்தர்)
4. Accounts Clerk — 700 SR
   (Cashier experience)
5. Dispatches — 650 SR
6. Radio T.V. Technician — 700 SR
7. First aid Man — 800 SR
   (நீந்தும் அனுபவத்துடன்)
8. Store – keeper
9. Cook
   (மேலைத்தேய, கீழைத்தேய சமையல் அனுபவத்துடன்)
10. Mechanic
11. Typist
12. Auto electrician
13. Trailer Driver — 800 SR

● மேற்கண்ட வெற்றிடங்களிற்கு சற்றேனும் ஆங்கில அறிவு தேவை.
●● இவற்றிற்கு நேர்முகப் பரீட்சை உண்டு.
●●● நேர்முகப் பரீட்சையில் தெரிவானால் இரு வாரங்களில் பயணம் மேற்கொள்ளலாம்.
●●●● இது ஒரு AMERICAN COMPANY

உடன் தொடர்பு கொள்ளவும்:

'M' Three Travel

Indrabawanam, Sothy Road, Kankesanthurai.
No. 1, 2nd Lane, Power House Road, Jaffna.

(சி/3479)

★ சவுதி வேலை வாய்ப்பு

		No
1.	Technical Manager	01
2.	Safety Officer	02
3.	Senior Suprintendent Operation	—01
4.	Senior Suptd Management & Documentation	—01
5.	Senior Suptd Maintenance & Repairs	—01
6.	Senior Supervisor, Vessels & Berths Operation	—01
7.	Supervisor Berths & Ships	—05
8.	Chief Checker... Cargo	—02
9.	Supervisor ... Warehouse	—01
10.	Foreman-Ships/Berths/Labourer	—12
11.	Tally Clerks	—12
12.	Ware House – Storekeeper	—03
13.	Mechanical Supervisor	—01
14.	Electrical Supervisor	—01
15.	Ship & Shore Worker	—128
16.	Diesol Mechanic	—02
17.	Electrician	—02
18.	Hydraulic Technician	—02
19.	Skilled Labourer	—08
20.	Carpenter	—02
21.	Unskilled Labourer	—04
22.	Dangerous Materials Tech Sup	—01
23.	English Typist	—01
24.	Male Nurse	—01
25.	Documents Clerk	—02
26.	Doctor	—01
27.	Forklift Driver	—20
28.	Head Truck Driver	—06
29.	Mobdle Crane Driver	—02
30.	Synch Rolift Driver	—02

உடனடியாக பாஸ்போட், சான்றிதழ்கள், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

A. தவச்செல்வம்
B. Sc (Hons)
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.

[C-3476]

மாணவர் தோல்வியைக் கண்டு ஒதுங்கிவிடாமல் தொடர்ந்து முயற்சித்தால் வெற்றி கிடைக்கும்

நாவற்குழி வித்தி விளை. போட்டியில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 7 மாணவர்கள் தோல்வியைக் கண்டு ஒதுங்கிவிடக் கூடாது தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும். நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

யாழ். நாவற்குழி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ் பெனின்சுலா குறூப் பொது முகாமையாளர் திரு·சி. சிறீஸ் சுந்தகுமார் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் திரு. த. முத்துக் குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அவர்தொடர்ந்துபேசுகையில் இன்று மாணவர்கள் விளையாட்டில் போதிய அக்கறை செலுத்துவதில்லை. அவர்கள் விளையாட்டிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி. துளசி [சிறீஸ்சுந்தகுமார் வழங்கினார்.

இம் மெய்வல்லுனர் போட்டியை முன்விட்டு நடாத்தப்பட்ட பத்து கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் 112 மாணவர்கள் பங்கு பற்றி 110 மாணவர்கள் ஓடி முடித்தமை குறிப்பிடத் தக்கது.

போட்டிகளில் சம்பந்தர் இல்லம் முதலாம் இடத்தையும், அப்பர் இல்லம் இரண்டாம் இடத்தையும் சுந்தரர் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (க)

கல்வியோடு சமய உண்மைகளையும் உணர்ந்து கற்க வேண்டும்

கோப்பாய், மார்ச். 7 கல்வியின் முக்கியத்துவத்தையும் கல்வியோடு சமய உண்மைகளையும் உணர்ந்து கற்க வேண்டும்.

கோப்பாய் வடக்குறோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வணக்கத்துக்குரிய பங்குத் தந்தை அருட் திரு அ. சகாயதாசன் இப்படித் தெரிவித்தார்.

விழாவுக்கு பாடசாலை அதிபர் திரு. க. விநாயகலிங்கம் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக, கோப்பாய் கொத்தணி பாடசாலைகளின் உப அதிபரும், கோப்பாய் மகாவித்தியாலய அதிபருமாகிய திரு. க. தங்கராஜா கலந்துகொண்டு உரையாற்றினார்.

முன்னைநாள் அதிபர் திரு. அ. நாகரத்தினமும் உரையாற்றினார். பாடசாலை மாணவர்களினது கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-72)

விதவைகளுக்கு உதவி

யாழ்ப்பாணம் மார்ச்7 நோர்வே அபிவிருத்தி நிறுவனம் யாழ்மாவட்டத்தில் உள்ள 61 விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்கு உதவிகளை வழங்கமுன் வந்துள்ளது.

இந்த நிறுவனம் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் ஊடாகவே இவ்வுதவிகளை வழங்கவிருக்கின்றது.

36 பேருக்கு தையல் இயந்திரங்களும், ஏழுபேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் ஆறு பேருக்கு கோழிப்பண்ணை அமைப்புகளான உதவிகளும், 10பேருக்கு சிறிய வியாபாரம் ஆரம்பிக்க உதவிகளும் இரண்டு பேருக்கு மாட்டு வண்டிகளும் வழங்கப்படவிருக்கின்றன. (-3)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்
வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1990/91

பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

★ ஆரம்பம்: 31 — 03 — 90 ★

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கலைமாணி (B. A) விஞ்ஞானமாணி (B. Sc) வர்த்தகமாணி (B. Com)
(புள்ளி விபரவியல்)

விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

● பல்கலைக்கழக பதிவுகள் யாவும் நிறுவனத்தால் செய்து தரப்படும்.

பதிவாளர்:-

ASTAN INSTITUTE
166/1, Hospital Road, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி-3468]

யாழ்ப்பாண மாநகர சபை, கேள்வி அறிவித்தல் 1990

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட சந்தை, இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை 01 – 04 – 90 தொடக்கம் 31 – 12 – 90 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரால் 23 - 03 – 90 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணையும் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 50/- வும் செலுத்துவதன் பேரில் 21-03-90 ஆம் திகதி புதன் பிற்பகல் 3.00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு 23 – 03 – 90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தின் நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 05 – 03 – 90

	குத்தகை விபரம்	குத்தகை காலம்	கேள்விப் பிணை	நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கேள்வி தொகை	மாத வாடகை
1.	செங்குந்தா சந்தை	9 மாதம்	5000/-	20,0000/-	.....
2.	கொட்டடி ஆட்டிறைச்சி கடை இல. 5	9 "	2500/-	9,000/-	112,50
3.	நாவாந்துறை ஆட்டிறைச்சி கடை இல. 8	9 "	2500/-	1,800/-	200 00
	கடை இல. 9	9 "	2500/-	1,800/-	200.00
4.	நாவாந்துறை கோழிக் கடை இல. 10	9 "	2500/-	1,800/-	200.00

[சி-3434]

விரைவில் வெளிவருகிறது!

ஞானக்கதிர் பங்குனித் திங்கள் இதழ்!

அம்பாள் அடியார்களுக்கு அருவிருந்து!!

ஞானக்கதிர்
அன்பு - அறநெறி - ஆன்மீகம்

★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாள் வழிபாட்டு முறைகள்
★ அம்பாளுக்குரிய விரதநாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இலைகள், இரத்தினங்கள் பற்றிய விளக்கம்.
★ அம்பாளின் ஈழத்துத் திருத்தலங்களான;
- □ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
- □ பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம்
- □ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
- □ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்

— ஆகியவற்றின் அற்புதங்களும், வரலாறும்
★ பகவான் சாயிபாபா வழங்கிய தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல .....!

பிரதி விலை ரூபா 5/- மட்டுமே

□ அம்பாள் அடியார்களே! உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!!

● பிரதிகளை தவறாது பெற உதயன் முகவர்களிடம் முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

[சி-3422]

வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 6248 வரை வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15 - 03 - 1990

விண்ணப்பங்களிற்காக விண்ணப்பப் படிவங்களை சங்க காரியாலயத்தில் 14 - 03 - 1990வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திரம் ரூபா 10 செலுத்தி சங்க செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும். மீளிப்பு வைப்புப் பணம் ரூபா 300/- ஆகும்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(சி/3424)

கம்பியூட்டர் கல்வி

✶ Diploma in Data Processing and Computer Programming in BASIC LANGUAGE
ஆரம்பம்: 07 Mar. 1990
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 8. 30 a.m
10 Mar. 1990
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) 4.00 p.m.

✶ WORD PROCESSING
ஆரம்பம்: 10 Mar. 1990
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்) 4 p m

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

Practical on IBM (Compatible Machines)

UNIKCO COMPUTER CENTRE
No 5, Power House Road,
2nd Lane, Jaffna.

(சி/3958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

07 - 03 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/90
★ Processing செய்தல் இலவசம்,
★ விற்பனை-வர்ண நிழற்பட சுருள்கள்,
★ பட அல்பங்கள், பெற்றறிகள்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

தனிநாட்டுப் பிரகடனத்துக்கு எதிராக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது?

சபையில் சிறிமாவோ கேள்வி

கொழும்பு, மார்ச் 7

வடக்கு-கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனி நாடு பிரகடனம் செய்திருக்கிறார். இது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது சபைக்கு அறிவிக்கப்படவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுந்து, வடக்கு - கிழக்கில் தனி ஈழம் பிரகடனம் செய்யப்பட்டது தொடர்பாக விவாதம் ஒன்று நடத்தப்படவேண்டும் என்று கோரினார்.

இதற்கு சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது அனுமதி வழங்கினார்.

அதனை அடுத்து திருமதி பண்டாரநாயக்கா மேலும் பேசியதாவது;

''இந்த நிலைமையை அரசாங்கமே உருவாக்கியது திரு. வரதராஜப்பெருமாள் இந்த மாதிரி நடவடிக்கை எடுப்பார் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்பார்த்த ஒன்று.

''அரசு திரு. வரதராஜப்பெருமாளுக்கு பாதுகாப்பளிக்கின்றது. திரு. வரதராஜப்பெருமாள்மீது அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்காது இருந்து வருகிறது. இதனால் தான் இவ்வாறான நிலைமை இன்று எழுந்திருக்கிறது.''

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

ஈ. பி. ஆர். எல். எவ்.

ஈ.பி ஆர். எல். எவ் எம். பி. திரு. க. யோகசங்கரி பேசுகையில் சொன்னதாவது;

திரு. வரதராஜப்பெருமாள் எடுத்துள்ள நடவடிக்கை ஸ்திரப்படுத்தப்பட்டால் தமிழ் மக்களுக்கு எந்தவித பிரச்சினையும் இருக்கமாட்டாது.

இதற்கு முன்னர் பதவியில் இருந்த எல்லா அரசுகளும் கொடுத்த வாக்குறுதிகளைக் கௌரவிக்கவில்லை.''

இப்படிக் கூறினார்.

கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் துணை அமைச்சர் டாக்டர் விமல் விக்ரமசிங்கா சொன்னதாவது;

வடக்கு - கிழக்கு பிரதேசத்தை இந்தியாவின் ஒரு மாநிலமாக்குவதே திரு. வரதராஜப்பெருமாளின் நோக்கமாகும். திரு. வரதராஜப்பெருமாளின் தனிநாடு பிரகடனம் அரசியல் யாப்புக்கு முரணானது. எவ்விதத்திலும் இதற்கு இடமளிக்கப்பட முடியாது. இந்த நிலையைப் பயன்படுத்தி லாபம் அடைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முயல்கிறது.''

இப்படி அவர் கூறினார்.

ஈரோஸ் எம். பி.

ஈரோஸ் எம். பி. திரு. பரராஜசிங்கம் பேசுகையில் சொன்னதாவது;

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் பலனளித்துள்ளன. இதன் காரணமாக வடக்கு - கிழக்கு நிலைமை வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது.

சுமார் 35 லட்சம் தமிழ்மக்களின் பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகளின்மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டியவையே.

திரு. வரதராஜப்பெருமாளின் செயல் கண்டிக்கப்பட வேண்டியது.''—என்றார்.

சுதந்திரக்கட்சி எம்.பி திரு. மைத்திரிபால சேனநாயக்கா சொன்னதாவது;

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தனிநாடு பிரகடனப் படுத்தப்பட்டதற்கான பொறுப்பை இந்த அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

எனினும் வடக்கு - கிழக்குப் பகுதி மக்களின் பாதுகாப்பை — குறிப்பாக சிங்கள - முஸ்லிம் மக்களுக்கும் திரு. வரதராஜப்பெருமாளுக்கு எதிரானவர்களுக்கும் — உறுதிப்படுத்துவது அரசின் கடமையாகும்'' — என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி திரு. தில்யநாதன் பேசுகையில் —

நாடு அரசியல் நெருக்கடி நிலைக்கு ஆளாகியுள்ள வேளையில் தனிநாடு உசிதமானதல்ல'' — என்றார்.

தினேஷ்

மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தனா பேசுகையில் —

வடக்கு - கிழக்கு மாகாண சபை உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சகல அதிகாரங்களையும் நாடாளுமன்றம் பொறுப்பேற்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கும் தாமதமின்றித் தீர்வு காணப்பட வேண்டும் — என்றார்.

ஐ. தே. க. எம். பி திரு. ஜினதாஸ பேசுகையில் —

இப்பிரச்சினை சமாசமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இதனை நல்ல முறையில் அணுகாவிட்டால் விளைவுகள் பாதகமாக அமையலாம் — என்றார்.

அஷ்ரப்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் பேசுகையில் —

வடக்கு - கிழக்கில் அமைதி நிலவவில்லை. வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதால் பிரச்சினை தீரப்போவதில்லை. அங்குள்ள நிலைமையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

இந்த விஷயத்தில் அரசு ஒரு முடிவை எடுக்கும்போது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் கருத்திற்கெடுத்துக்கொள்ள வேண்டும் — என்றார்.

திரு. அனில் முனசிங்கா (ஸ்ரீ. ல. சு. க.) பேசுகையில்—

வடக்கு-கிழக்கு மாகாணம் தற்போது பல்வேறு இயக்கங்களால் ஆளப்பட்டு வருகிறது — என்று சொன்னார்.

திரு. ரி. டபிள்யு. ராஜரத்தினம் (ஸ்ரீ. ல. சு. க) பேசுகையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் நீண்ட காலமாக சிவில் நிர்வாகம் இயங்கவில்லை என்று சுட்டிக் காட்டினார்.

ஐ. சோ. முன்னணி எம். பி அத்தாவுட செனவிரத்னா பேசுகையில் —

நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகளை ஐக்கிய சோஷலிச முன்னணி எதிர்க்கிறது என்று சொன்னார்.

விஜேக்கூன்

அமைச்சர் யு. பி. விஜேக்கூன் பேசுகையில் —

சுதந்திரக்கட்சி ஆரம்பமானதில் இருந்தே இனப் பிரச்சினையும் தோன்றியது. 1958 இல் இனப் பிரச்சினை மோசமடைந்தது— என்றார்.

1983இல் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதில் சுதந்திரக் கட்சியே பிரச்சினையை ஏற்படுத்தியது என்றும் அமைச்சர் விஜேக்கூன் குற்றம் சாட்டினார்,

அரசு தேவையான நிதியை ஒதுக்கியபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றத்தவறிவிட்டனர் என்றும் அமைச்சர் விஜேக்கூன் தெரிவித்தார்.

(இ—எ)

பண மோசடி செய்த 75 போலி ஏஜன்சிகள் மீது அரசு வழக்குத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 7

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக்கூறி பெரும் பணமோசடி செய்த 75க்கு அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு போலி ஏஜன்சிகளுக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வழக்குகள் தாக்கல் செய்துள்ளது.

நான்கு குவைத் ஏஜன்சிகளும், மூன்று லெபனான் ஏஜன்சிகளும், ஒரு அரபு ஏஜன்சியும் இதில் அடங்குவர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வேலை வாய்ப்பு முகவர்கள் பல வருடங்களாக 5 நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி பலலட்ச ரூபாய்களை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகம் பம்பாயிலும், கராச்சியிலும் முகவர்களினால் கைவிடப்பட்ட 130 பேரைத் திருப்பி வரவழைத்துள்ளது. லெபனானில் இருந்து 19 பேரைத் திருப்பி அழைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-து)

பட்டதாரி ஆசிரியர்கள் 83 பேருக்கு நாளை நியமனம்

யாழ்ப்பாணம். மார்ச் 7

பட்டதாரி பயிற்சித் திட்டத்தின்கீழ் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 83 பேருக்கும் நாளை எட்டாம் திகதிமுதல் நியமனம் வழங்கப்பட இருக்கின்றது.

நாளை பிற்பகல் 2மணிக்குப் பின் சம்பந்தப்பட்டவர்களை யாழ் கல்வித்திணைக்களத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் மாகாணசபையால் வழங்கப்பட்ட, கடிதத்தின் பிரதி பட்டதாரிப் பட்டம் பெற்ற சான்றிதழ்ப் பிரதி ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

எமது நேற்றைய புதிய வெளியீடு
பிரபு - ரேவதி - ஜனகராஜ் நடித்த
பாசிலின்
அரங்கேற்ற வேளை
(ஒறிஜினல்)
வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.
[11964]

டிலிவரி சைக்கிள்
தேவை
நல்ல நிலையில் டிலிவரி சைக்கிள் வைத்திருப்பவர்கள் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
அருண் மார்க்கெட்டிங் அன் அட்வேர்ட்டைசிங் சேவிஸ்,
இல. 15, 2-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 7-03-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆப்கனில் அதிரடிப் புரட்சி!

மாஸ்கோ, மார்ச் 7

ஆப்கன் அதிபர் நஜிபுல்லாவை பதவியிலிருந்து வெளியேற்றும் அதிரடிப் புரட்சி ஒன்று காபூலில் இடம்பெற்றதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

காபூலில் தாக்குதல் மோசமடைந்து இருப்பதாகவும் நிலைமை கவலைதருவதாக இருப்பதாகவும் மாஸ்கோவில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ—எ)

யு.எஸ். குழு இன்று வருகிறது

யாழ்ப்பாணம் மார்ச் 7)

யு.எஸ். எயிட்ஸ்(U.S AIDS உதவி வழங்கும் நிறுவன அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறது. ஐவர் கொண்ட இந்தக் குழு யாழ் மாவட்டத்தில் வீடமைப்பு, விவசாயத் திட்டங்களை பார்வையிடும்.

(ஒ — 3)

பெண்ணுக்கு கிடைத்த அதிஷ்டம்

சிட்னி, மார்ச் 7

பூகம்பத்தில் கடந்த ஆண்டு வீடிழந்த ஒருவருக்கு (திங்கள்(நேற்று முன்தினம் சுவீப்பில் முதலாவது பரிசாக 75ஆயிரம் அமெரிக்க டாலர் கிடைத்தது.

ஆஸ்திரேலியா, நியூகாசில் நகரில் வசிக்கும் ஆயியா என்ற பெண்ணே இந்த அதிஷ்டசாலியாவார்.

(ஒ — எ)

மேலும் இரு பௌசர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடபிராந்திய பெற்றோலிய க்கூட்டுத்தாபனத்துக்கு மேலும் இரண்டு எரிபொருள் பௌசர்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்போது மொத்தம் 7பௌசர்கள் உள்ளன.

(ஒ—10)

ஒருவருட---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் அலவன்ஸ் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ தற்சமயம் தொண்டர் சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஜி. சி. ஈ, (உயர்தர) பரீட்சையில் சித்தி இருக்கவேண்டும்.

★ விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கு — ஜி. சி, ஈ. (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தி வேண்டும்.

★ உயர்தர பரீட்சையில் சித்தியடையாதவர்ஞள் ஜி, சி. ஈ. (சா. த.) சித்தி இருந்தால் விண்ணப்பிக்கலாம்.

★ மாதம் 1000 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும்.

(இ-3(

26 மாகாண--,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துண்டிக்கப்பட்டனவாகும்.

இதேவேளை—

இப்பகுதிகளை விட்டுச் சென்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்களால் பாவிக்கப்பட்ட மேலும் 19 தொலைபேசி இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-21)

கிளிநொச்சியில்

வசதிக் கட்டண ஆசிரியரின் பதவி நிரந்தரமாக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

கிளிநொச்சி மாவட்டத்திலும் வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படஇருக்கிறது. விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் எதிகவரும் கனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்துக்குச் சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்ஞள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களையும், பிறப்புச் சான்றிதழையும் எடுத்துவருமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அறிவித்துள்ளார்.

22-2-90இல் வெளியான வர்த்தமானியின் அறிவுறுத்தலின்படி விண்ணப்பங்கள் தயார் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-9)

குருநகர் மீனவருக்கு இன்று உபகரணங்கள் கையளிப்பு

குருநகர், மார்ச் 7

ஜனசத்தித் திட்டத்தின் கீழ் கடற்றொழிலாளருக்கு உபகரணங்கள் வழங்கும் வைபவம் இன்று காலை 9. 30 மணிக்கு குருநகர் யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

கிராமிய கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வைபவத்திற்கு மேற்படி சங்கத் தலைவரும், பங்குத் தந்தையுமான வண பி. எம். இம்மானுவேல் அடிகள் தலைமை வகிப்பார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், உதவிஅரச அதிபர் திரு.சபாபதிப்பிள்ளை ஆகியோர் கடற்றொழில் உபகரணங்களை மீனவர்களுக்கு வழங்குவர்.

சீசெல்ஸ்குவுக்கு

மரண தண்டனை விதித்த ராணுவ நீதிபதி தற்கொலை

ரூமேனியாவின் ஜனாதிபதியாக இருந்த நிக்கொலாய் சீசெஸ்கு மீது மரணதண்டனை விதித்த இராணுவ நீதிபதி மேஜர் ஜெனரல் ஜிகா போபா தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நீதி அமைச்சு அலுவலகத்தில் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்தார் என்று அவரது குடும்ப நண்பர்கள் அறிவித்தனர்.

சீசெஸ்கு மீது மரணதண்டனை விதித்தபின்னர் மேஜர் ஜெனரல் போபா மனக்கோளாறினால் பீடிக்கப்பட்டு காணப்பட்டார் என்று அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (இ-எ)

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

கொடிகாமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் ஜேர்மனியில் காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை ஆசிரியரின் மூத்த மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜ்குமார், ராஹினி, ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரேஸ்வரி, சுந்தரராணி, சுந்தரநாயகி, சுந்தரகுமாரி, சுந்தரநாதன் (ஜோடான்), சுந்தரராஜன் (லண்டன்), சுந்தரகுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகிலன், அகிலா, அகில்தான், கருணா, கோமஸ்வரன், சரிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹேமா, மாருதன், கர்தா, லக்கியா ஆகியோரின் பெரியப்பாவும், திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன், இராஜகோபாலன், துரைராஜா (சவூதி), இராஜநாயகம், சிவராஜா (கொலன்ட்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-03-1990 இன்று ஜேர்மனியில் நடைபெறும். அதேவேளை அன்னாரது இல்லமாகிய ''சுந்தரகிரி'' கொடிகாமத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
''சுந்தரகிரி'', கொடிகாமம். [11962]
மனைவி, தகப்பன், சகோதரர்கள்

திருமதி சபாரெத்தினம் இராசம்மா

திருமதி சபாரெத்தினம் இராசம்மா அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் திரு. சபாரெத்தினத்தின் அன்பு மனைவியும், செந்தில்ராஜா (C.O), செந்தில்வேல், செந்தில்நாதன் (யாழ். மாநகர சபை), S. தனபாலசரஸ்வதி (யாழ். மாநகர ஆயுர்வேத வைத்தியர்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், செ. ஆக்கினேஸ் அம்மா, செ. விமலாதேவி, செ. மகேஸ்வரி ஆகியோரின் அருமை மாமியாரும், மதுராந்தகன், மதிவண்ணன், மதிசூதனன், பிரபாகரன், பிரதீபா, சத்தியநாதன், ஆனந்தபாபு, சிந்துப்பிரியா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 07-03-1990 இன்று புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
83, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
ச. செந்தில்நாதன்
[11963]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org